

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், திரு. எ.அஜில்விமல்சிங் என்பவர் விபத்தில் மரணமடைந்தமைக்காக, அன்னாரது தாயார் திருமதி. லீலாபாய் அவர்களிடம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய நிதியிலிருந்து ரூ. ஒரு இலட்சத்திற்கான காசோலையும், ஈமசடங்கிற்காக ரூ. 2 ஆயிரத்திற்கான காசோலையையும் மாவட்ட ஆட்சியர் அலுவலக சிறு கூட்டரங்கில் இன்று (23.09.2016) வழங்கினார்.

செ.வெ.எண் : 668/2016 நாள்: 23.09.2016

# பத்திரிக்கை செய்தி

கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் காக்க தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம் மற்றும் ஓய்வூதியம் போன்ற நலத்திட்ட உதவிகள் அந்தந்த மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி கன்னியாகுமரி மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகம் மூலம் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் திரு.யு.அஜில்விமல்சிங் (வயது 27), த.பெ. அந்தோணி, வண்ணான்விளை, தேனாம்பாறை, பாகோடு, கன்னியாகுமரி மாவட்டம் என்பவர் கடந்த 09.07.2012 அன்று கொத்தனார் வேலைக்கு சென்ற போது எதிர்பாராதவிதமாக புகைவண்டி மோதி விபத்து மரணமடைந்தார். எனவே இறந்த உறுப்பினரின் நியமனதாரர் மற்றும் தாயார் திருமதி. லீலாபாய் என்பவருக்கு அவரது மகனின் விபத்து மரண உதவி தொகையாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரிய நிதியிலிருந்து ரூ.1,00,000/- மற்றும் ஈமச்சடங்கு உதவி தொகையாக ரூ.2,000/- ஆகியவற்றுக்கான செயல்முறை ஆணை மற்றும் காசோலைகள் கன்னியாகுமரி மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகம் மூலம் வழங்கும் நிகழ்ச்சி கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் சு.சவான், இ.ஆ.ப., அவர்கள் ரூ.1,02,000/-க்கான காசோலைகளை பயனாளிக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திரு.சு.சுடலைராஜ்(கூ.பொ), உதவி கணக்கு அலுவலர் திரு.பா.ஜெயச்சந்திரன் மற்றும் அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.பொ.பாலம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொழிலாளர் அலுவலர்,
(சமூக பாதுகாப்புத் திட்டம்) (கூ.பொ.)
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.